21st March 1959]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) Clause (iii) of section 13 of the Madras Panchayats Act, 1958, provides that all elementary schools maintained by District Boards and Panchayats shall stand transferred to and be vested in the proposed Panchayat Union Councils. Hence no action was taken by the Government on the representation.

Lungis.

* **936-B Q.—SRI A. VEDARATHNAM :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்திலிருந்து இலங்கைக்கு ஏற்றுமதியாகி வந்த லுங்கி இறக்குமதியை இலங்கை அரசாங்கம் தடைசெய்திருப்பதினால் ஏற்பட்ட நிலையைப் பற்றி நம் அரசாங்கம் மத்திய அரசாங்கத்துக்கு எழுதியுள்ளதா?

(ஆ) அப்படியானால், அதன் விபரம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes, Sir. The Government of India were requested to move the Government of Ceylon to lift the ban imposed by them on the import into their country of lungis from outside and restore the *status quo ante*. The ban has since been lifted by the Government of Ceylon on representations made by the High Commissioner for India in Ceylon.

SRI A. VEDARATHNAM : இப்போது இந்தத் தடை நீக்கிய பிறகு, முன்பு இருந்தபடியே லுங்கிகள் இலங்கைக்குப் போய்க் கொண்டிருக்கிறதா ? அல்லது அளவில் ஏதாவது குறைக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த அளவில் சற்று உயர்த்தப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் ஒரு மடங்கு லோகல் ப்ரொக்யூர்மெண்ட் செய்தால், இரண்டு மடங்கு வெளியில் இருந்து கொண்டுவரலாம் என்று இருந்தது. இப்போது ஒரு மடங்கு லோகல் ப்ரொக்யூர்மெண்ட் செய்தால் ஐந்து மடங்கு வெளியிலிருந்து கொண்டு வரலாம் என்று செய்யப்பட்டிருக்கிறது.

Handloom Weavers in Kanyakumari District.

* 936-C *Q*.—SRI S. LAZAR (on behalf of SRI T. T. DANIEL) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to implement the scheme of renovation of houses for weavers in Kanyakumari district;

(*b*) whether the scheme has already been implemented in any other part of the State;

(*c*) whether any representation has been received by the Government from the weavers of Kanyakumari district for introducing this scheme; and

(*d*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The scheme is applicable to all districts including Kanyakumari district. No proposal for implementing the scheme in Kanyakumari district has been received so far.

(b) One scheme for the repair and renovation of forty houses of the members of Melapalayam Weavers' Co-operative Society in Tirunelveli district at a cost of rupees thirty-nine thousand one hundred (Rs. 39,100) and another for rupees thirty-nine houses of the members of the Ammapet Weavers' Co-operative Society in Salem district at a cost of rupees thirty-eight thousand and fifty (Rs. 38,050) are under implementation.

(c) & (d) A representation was made at the conference of the representatives of the handloom weavers of Kanyakumari district held at Karingal on 9th June 1958 to implement the repair scheme instructed to examine the possibilities of implementing the repair instructed to examine the possibilities of implementing the repair schemes by the weavers' co-operative societies in that area and to submit specific proposals for one or two societies. No specific proposals have been received from the Deputy Registrar.

Fair Price Shops

* 936-D *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நியாயவிலைக் கடைகளில் கோதுமையும், கேழ்வரகு, சோளம் போன்ற தான்யங்களும் நியாய விலைக்குக் கிடைக்க வகை செய்ய உத்தேசமுண்டா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Wheat alone is being sold through fair price shops at present in this State. There is no proposal to distribute ragi, maize and such other foodgrains through these shops.

(b) Wheat is sold from the fair price shops at 60 naye paise per Madras Measure. Each customer can buy upto 5 Madras Measures per day. The wheat is supplied to the fair price shops by the Regional Director (Food), Madras, from the Central stocks.

SRI A. VEDARATHNAM : அவ்வாறு புஞ்சை தான்யங்களுக்கும் நியாய விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா, அதாவது கேழ்வரகு போன்றவைகளுக்கு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி ஒன்றும் இல்லை.

SRI S. M. ANNAMALAI : கிராமப்புரங்களில் கம்பு, கேழ்வரகு போன்ற தானியங்களை அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். அவைகளின் விலை உயர்ந்துகொண்டே போகிறது. அவ்வாறு உயர விடாமல் அந்த தானியங்களையும் நியாய விலைக்கடைகளில் வைத்து நியாய விலைக்கு விற்க அரசாங்கம் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்படிப்பட்ட தானியங்களை நியாய விலைக் கடைகளில் வைக்க வேண்டிய அவசியம் இல்லை. விலை உயர்ந்து போவதைக் குறைக்கவேண்டும் என்று கனம் அங்கத்தினர் நினைத்தால் அதற்கு தனியாக கேள்வி கேட்டால் நான் அதற்கு விவரங்கள் சொல்லுகிறேன்.